THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) No request was made to the Government of India for supplying rice in 1958. In March 1959 the Government of India were requested to procure and supply 10,000 tons of Nellore rice in exchange for an equal quantity from the stocks procured by this Government in this State. The Union Government supplied 2,000 tons in response to this request.

Subsequently, the Government of India have agreed to allot up to one lakh tons of rice for this year to compensate for the heavy movements taking place from this State of Kerala. Out of this, they have allotted 15,000 tons in August 1959.

* 28 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state the quantity of (i) rice and (ii) paddy got through the Centre after May 1959 for our State and their respective prices?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: In April last, the Government of India allotted 2,000 tons of Nellore rice from Andhra Pradesh. They charged Rs. 21·50 per maund f.o.r. Madras in respect of 1,000 tons and Rs. 23 per maund f.o.r. Madras in respect of the remaining 1,000 tons.

In August 1959, the Government of India have made a further allotment of 15,000 tons of raw rice comprising 4,000 tons of Andhra rice and 11,000 tons of Burma rice. The prices of these 15,000 tons have not yet been communicated.

* 29 Q.—SRI K. VINAYAKAM: Will the Hon. the Minister for Home be pleased to state what are the concessions shown to the millers of paddy so as to encourage import of paddy into our State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: In order to encourage the import of paddy into this State, the Government have totally exempted the imported paddy as well as the rice obtained from it from the scope of procurement in this State. The Government have also allowed an overall allowance of 39 nP. per maund in addition to actual railway freight over and above the ceiling rates fixed for paddy in the Andhra price notification to the paddy merchants in this State who import paddy from Andhra and sell it as paddy.

* 30 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have received any protest from the merchants regarding the frequent change of the conditions governing the import of paddy from places outside the State and also the sale of paddy?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

*Tanjore rice for Madras*

* 30-A Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether steps have been taken to bring Tanjore rice for Madras in view of the short supply of Nellore rice; and

31st August 1959]

(*b*) if so, the amount of rice brought to Madras City recently?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) A total quantity of 12,775 tons has been brought to Madras City from the Tanjore district.

SRI A. A. RASHEED : Sir, have the Government received any complaint that rice sold through fair price shops has a bad odour? Is it a fact that only one variety of rice is sold through these shops?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have already given my answer 'No' to the main question whether the rice was bad. I have nothing else to add.

SRI N. K. PALANISAMI : ஸார், ஸ்டேட் டிரேடிங் பற்றி சர்க்காருடைய கொள்கை என்ன? ஏற்கெனவே ஸ்டேட் டிரேடிங் கொண்டு வருகிறோம் என்று சொல்லி இப்போது அமுல்படுத்தாததன் காரணம் என்ன? சர்க்கார் இந்தக் கொள்கையைக் கைவிட்டு விட்டார்களா? அப்படி ஸ்டேட் டிரேடிங் கொண்டு வருவதாக இருந்தால் மத்திய சர்க்காருடன் ஏன் ஒத்துழைக்கவில்லை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஸ்டேட் டிரேடிங் பொறுத்த மட்டில் ஒரு ராஜ்யம் மட்டும் செய்ய முடியாது. ஆனால், ஸ்டேட் டிரேடிங் எப்படி நடந்தால் நல்ல முறையில் நடக்கும் என்பதைப் பற்றிய அபிப்பிராயம் தான் முன்பு நடந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சர்க்காருடைய அபிப்பிராயம்—மத்திய சர்க்காருக்குத் தெரிவித்த அபிப்பிராயம்—இங்கே சமர்ப்பிக்கப்பட்டது.

SRIMATHI T. N. ANANDANAYAKI: கனம் சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு சங்கங்கள் போக வேறு தனிப்பட்ட நபர்களுக்கு லைஸென்ஸ் கொடுக்கும்போது எந்தத் தகுதியைப் பார்த்துக் கொடுக்கப்பட்டது? கார்ப்பொரேஷனில் உபாத்தியாயராக இருப்பவருக்கும், கார்ப்பொரேஷன் சபைக் கட்சித் தலைவர் திரு. ஜீவரத்னம் அவர்களுக்கும் அவர்கள் வியாபாரிகள் என்ற முறையில் லைஸென்ஸ் கொடுக்கப்பட்டதா? இது பற்றி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சென்னை நகரத்தைப் பொறுத்த மட்டில் நியாய விலைக் கடைகள் டி.யூ.வி.எஸ். மூலமாக நடைபெற்று வருகின்றன. போதிய நியாய விலைக் கடைகளை டி.யூ.வி.எஸ் ஸ்தாபனத்தார்கள் நடத்த முடியவில்லை. ஆகவேதான் தனிப்பட்ட நபர்களுக்குக் கடைகளை நடத்துவதற்கு லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றன, டி.யூ.வி.எஸ். மூலமாக. முன்பு நியாய விலைக் கடைகள் வைத்திருந்தவர்களுக்கு—டெபாஸிட்டைக் கூடத் திரும்ப வாங்காமல் வைத்திருந்தவர்களுக்கு—நன்றாகப் பார்த்து டி.யூ.வி.எஸ். ஸ்தாபனத்தினர் எங்கெங்கு வைத்து நடத்த முடியவில்லையோ அங்கெல்லாம் தனி நபர்கள் நடத்துவதற்காக லைஸென்ஸ் கொடுக்கப்பட்டது.

SRI A. A. RASHEED : Sir, what is the total quantity of rice sold to each person? Is there any proposal to increase the supply to each person?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Per day ten bags were allotted, but now the Government have issued instructions that the quantity could be raised to even twenty bags.

SRI T. KARIA GOUNDER : கனம் தலைவர் அவர்களே, சர்க்கார் வாங்குவது எடை போட்டு; வாங்குகிற முறையையே விற்கிற இடத்தில் அனுசரித்து எடை மூலமாக விற்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா? வட ஆற்காடு ஜில்லாவில் இந்த மாதிரி விற்பதால்

பல மோசடிகள் நடப்பதாக பிளானிங் போர்ட் கூட்டத்தில் பேசப்பட்டு வருகிறது ? இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வட ஆற்காடு ஜில்லாவில் பேசப்படுவது எனக்கு எப்படித் தெரியும் ? குறிப்பாக ஏதாவது புகார்கள் இருந்தால் அவைகளை எழுதி அனுப்பினுல், அவைகளை கவனித்து வேண்டியதைச் செய்யலாம்.

SRI M. P. SARATHI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் அரிசியின் விலை அநியாயமாக இருப்பதால், விலையை மேலும் குறைக்க சர்க்காருக்கு உத்தேசம் ஏதும் உண்டா ? இந்த நியாய விலை எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது என்று தெரியப்படுத்த முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நியாய விலைக் கடைகளில் சில்லரை விற்பனைக்கு விலை எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்று நான் முன்னமேயே சொன்னேன். எல்லாம் கணக்குப் போட்டுத் தான் விலை நிர்ணயம் செய்திருக்கிறது. அதிக விலை இருந்தால் அதைப் பற்றிக் கவலையில்லை. குறைந்த விலைக்கு வெளியில் வாங்கிக் கொள்ளலாம். அப்போது கூட்டுறவு சங்கங்கள் நஷ்டமடையும். அதைப் பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் கவலைப்படவேண்டாம்.

SRI N. K. PALANISAMI : நேஷனல் டெவலெப்மெண்ட் கவுன்ஸிலில் ரீடெய்ல் ப்ரைஸ் நிர்ணயிப்பது என்று முடிவு செய்து அதன் அடிப்படையில் நமது மாகாணத்தில் ரீடெய்ல் ப்ரைஸ் நிர்ணயிக்க முயற்சி செய்யவில்லை. மொத்தக் கொள்முதல் விலை ரூ. 34·84 ஆக இருக்கும்போது நிவாரணக் கடைகளில் ரூ. 43-க்கு—அதாவது ரூ. 10 அதிகமாக விற்கப்படுகிறது. இது எந்த அளவுக்கு நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் கொடுத்த தகவல் சரியல்ல. சில்லரை விலை நிர்ணயிக்க வேண்டும் என்பது இந்தச் சர்க்கார் சொன்ன அபிப்பிராயம். அது இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்த அரசாங்கத்தினுடைய அபிப்பிராயம் பரிபூர்ணமாக ஸ்டேட் டிரேடிங் வேண்டும், சில்லரை விலை கட்டுப்பாடு செய்யவேண்டும் என்பதுதான். நியாய விலைக் கடைகளில் விலை நிர்ணயிப்பதாவது எவ்வளவு கொள்முதல், எத்தனை மாதம் வைத்துக்கொள்ள வேண்டும் என்று எல்லாவற்றையும் வைத்துக் கணக்குப் போட்டு, அவர்களுக்கும் ஓரளவுக்கு மார்ஜின் கொடுக்கவேண்டும் என்ற முறையில் நிர்ணயிக்கப்படுகிறது.

SRI P. G. KARUTHIRUMAN : சபாநாயகர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் இருக்கும்படியான விலை உண்பவர்களுக்கு அநியாய விலையாக இருப்பதாக கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். ஆனால் இப்போது சர்க்காரால் தான்யத்தை உண்டாக்குபவர்களுக்கு நிர்ணயித்திருக்கும் விலை அநியாய விலை என்னும் புகார் சர்க்காருக்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு புலவரைப் போல் கேள்வி கேட்கிறார்கள். அது எனக்குப் புரியவில்லை.

SRI S. LAZAR : சாதாரண காலங்களில் இந்த அரிசி, நெல் வியாபாரம் செய்யக் கூடியவர்கள்—ஹோல்ஸேல் டீலர்ஸ்—மூட்டை ஒன்றுக்கு எட்டு அணா முதல் ஒரு ரூபாய் வரையில் மார்ஜின் வைத்து

31st August 1959]

வந்தது இப்போது மாறுபட்டு ஸ்டாக்கிஸ்ட்களுக்கு ரூ. 5 முதல் ரூ. 6 வரை மார்ஜின் இருப்பதாகச் சொல்லப்படுவது உண்மைதானு? இதைக் குறைக்க ஏதாவது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துதிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது, இப்போது தனிப்பட்ட வியாபாரிகள் தங்களை ஒன்றும் கவனிக்கவில்லை என்று அவர்கள் சொல்லும் அபிப்பிராயம்.

SRI T. S. RAMASWAMY : May I know, Sir, whether the Government have gone into the question of disparity between the procurement price and the selling price? If so, what conclusions have they come to?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have already stated that the Civil Supplies Department have gone into the whole question, and they have fixed a reasonable margin. This retail price is assessed on calculating the reasonable margin only.

SRI M. JANGAL REDDIAR : ஸார், அரசாங்கம் ரூ. 22-க்கு நெல்லை கொள் முதல் செய்கிறார்கள். அதே ஜில்லாவில் மார்கெட்டிங் சொஸைடி மூலமாக ரூ. 0–14–3-க்கு ஒரு படி அரிசி விற்கப் படுகிறது. எங்கள் ஜில்லாவிலேயே ப்ரொக்யூர் செய்து, ரூ. 0–14–3-க்கு விற்கும்போது மூட்டைக்கு ரூ. 8 வித்தியாசம் இருக்கிறது. அதை அரசாங்கம் அனுபவிக்கிறதா? பயிர் செய்கிறவர்களுக்கு அதனுல் பயன் உண்டா? இடையில் உள்ளவர்கள் அதை அடைகிறார்களா? அல்லது பொது மக்களுக்கு அதனுல் ஏதாவது பயன் இருக்கிறதா? இது பற்றி அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப் போகிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவதும் முன்பு தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயம். கனம் அங்கத்தினர் எப்படிக் கணக்குப் போட்டு ரூ. 8 லாபம் என்று சொல்லுகிறார்கள் என்று தெரியவில்லை. ஸிவில் சப்ளேஸ் அதிகாரிகள், கூட்டுறவு இலாகா அதிகாரிகள், கூட்டுறவு சங்கங்களை நடத்துகிறவர்கள் எல்லோரும் சேர்ந்து பல நாட்கள் ஆலோசித்து கணக்குப் போட்டு, நியாயமாக என்ன மார்ஜின் இருக்கவேண்டுமென்று பார்த்து, என்ன விலைக்கு விற்கலாம் என்று கணக்குப் போட்டு இந்த ஆண்டுக்கு விலையை நிர்ணயித்திருக்கிறது. லாபம் அப்படி அதிகமாக இருப்பதாக இருந்தால் அது கூட்டுறவு சங்கத்திற்குத்தான் போகிறது. தனி நபர் யாருக்கும் போகவில்லை. தனி நபருக்குப் போனுல்தான் இன்னும் ஜாக்கிரதையாகப் பார்க்கவேண்டும்.

SRI V. SANKARAN: ஆந்திராவிலிருந்து நெல்லாகத் தருவித்து நெல்லாக விற்றுல் மட்டும் கொள் முதல் விலைக்குக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு உண்டு என்று கூறப்பட்டது. அரிசிக்கு அந்த மாதிரியான சலுகை அளிக்காததற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது ஆந்திராவிலிருந்து நெல்லாக இருந்தாலும், அரிசியாக இருந்தாலும்—முதலில் அரிசிக்கு மட்டும் இல்லை——விலக்கு உண்டு. அந்த முறையில் ப்ரொக்யூர்மெண்ட் முறையும் மாற்றப்பட்டிருக்கிறது.

SRI K. B. S. MANI : ஸார், ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் தினசரி 10 மூட்டையிலிருந்து 20 மூட்டை வரை விற்கலாம் என்று உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னுர்கள். ஒரு வட்டாரத்தில் எவ்வளவு மக்கள் அரிசி வாங்குகிறார்கள் என்ற கணக்கில் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது முழு ரேஷன் அல்ல. ஒரு சிலருக்கு நிவாரணம் அளிக்கும் முறையில் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. எல்லோருக்கும் கிடைக்கவேண்டு

மென்ற கணக்குப் போட்டு கொடுக்கப்படவில்லை. எங்கெங்கு அவசியம் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் புதிதாக நியாய விலைக் கடைகள் திறக்கப் படுகின்றன.

SRI A. A. RASHEED : With reference to Question No. 27, may I know whether there is any minimum quantity which the Government of India have guaranteed to supply to our State every year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I can only say that it is not for every year that the Government of India have undertaken that. Only for this year, they have agreed to supply one lakh tons in view of the undue movements to Kerala.

SRI S. PAKKIRISAMI PILLAI : சென்னையில் [சில பாக்டரி களில் பி அண்டு சி போன்ற கம்பெனிகளில்—தொழிலாளர்களுக்காக ஸ்டோர்கள் திறக்கப்பட்டு அவர்களுக்காக அரிசி விநியோகிக்கப்பட்டு வருகின் றது. அந்த ஸ்டோர்களில் போதுமான அளவுக்கு அரிசி கொடுப்ப தில்லை. அவர்களுக்குக் குறைவாகக் கொடுக்கப்பட்டு வருகிறது என்ற தகவல் அரசாங்கத்துக்குத் தெரியுமா ? இது பற்றி அவர்களிடமிருந்து வந்த புகாரின் பேரில், அவர்களுக்குத் தேவையான அளவு அரிசி கொடுக்க என்ன நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருக்கிறார்கள் ? இனிமேலாவது அவர்களுடைய தேவையின் அளவுக்கு அரிசி கொடுக்கும் நிலையில் அர சாங்கம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆளுக்கு இரண்டு படி—பட்டணம் படி— வீதம் நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்படு கிறது. சென்னை நகரில் இருப்பவர்கள் எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய வகையில் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தப் படவில்லை. எங்கெங்கே நியாய விலைக் கடைகள் கூடுதலாக ஏற்படுத்தவேண்டுமென்ற அவசிய மிருக்கிறதோ அங்கு ஏற்படுத்தப்படும். கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னதுபோல் புகார் எதுவும் என்னிடம் கொண்டுவரப்படவில்லை.

SRI K. VINAYAKAM : Are the Government aware that in spite of the fact that so many Fair Price Shops have been opened in the City of Madras, there has been no appreciable tendency towards a fall in the prices in the open market and if so, will the Government come forward to consider the possibility of opening more Fair Price Shops in areas where there is a large demand, like slums?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, Government have been increasing the number of Fair Price Shops now and then. I do not agree with the hon. Member. So far as I have seen, the opening of Fair Price Shops has had a very good effect on the price factor.

SRI N. K. PALANISAMI : ஸார், டி.யு.சி.எஸ். நிவா ரணக் கடைகளில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் போய் அரிசி வாங்கலாம் என்று இருக்கும் காரணத்தால், 18 வயது ஆன குழந்தைகள் இல்லாத குடும்பங்களில் அவரவர்களே கடையில் போய் வாங்க வேண்டியிருக்கிறது. இதனால் வீட்டில் பெரியவர்களுக்குக் கஷ்டம் ஏற்படுவதால் 18 வயதுக்குக் குறைந்தவர்களுக்குக்கூட கொடுப்பதற்கு உத்தரவு இடப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, இது பற்றி முன்பே தங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. தாங்களே சொல்லியிருக்கிறீர்கள். 18 வயது என்று போடாமல் இருக்கும்போது ஐந்தாறு பேர் திரும்பித் திரும்பி வரிசையில்

நின்று வாங்கி கள்ள மார்க்கட்டில் விற்கப்படுகிறது என்பது முன்பே தங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதைத் தவிர்க்கவே இந்த நிபந்தனை போடப்பட்டிருக்கிறது.

Sri A. GOVINDASAMY : நஞ்சைக் காடுகள் அதிகம் இல்லாத பகுதியில், அரிசி கிடைக்காத பகுதியில்—தென்னாற்காடு மாவட்டத்தில் பல இடங்களில் நியாய விலைக் கடைகள் திறக்கப்படாமல் இருக்கின்றன. அங்கு அதிகப்படியான நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இரண்டு நாட்களுக்கு முன்புகூட நான் தென்னாற்காடு மாவட்டத்தில் சில பகுதிகளுக்குச் சென்றிருந்தேன். அதிகப்படியாக நியாய விலைக் கடைகளைத் அவசியத்திற்கு எற்ப திறப்பதாகச் சொன்னார். "Offtake" அதிகம் இல்லையென்று சொல்லி அதிக நியாய விலைக் கடைகள் திறக்கும்படி உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

Sri P. G. MANICKAM : கனம் சபாநாயகர் அவர்களே; தமது மாகாணத்தில் இன்று வரை எத்தனை நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன ? அவைகளின் மூலம் எத்தனை டன் அரிசியும், கோதுமையும் சப்ளை செய்யப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும். இப்பொழுது சுமார் 1,500 கடைகளுக்கு மேல் இருக்கிறது. கோதுமையும் சில கடைகளில் விற்கப்படுகிறது.

*Madras Loan*, 1971

* *Private Notice Question No.* 1. Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the amount realised by way of floating loans recently; and

(*b*) the purpose for which the amount will be utilised?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) The total amount subscribed to the recent Madras Loan, 1917, was Rs. 1,162 lakhs including conversion of Madras Loan 1959 of Rs. 56.81 lakhs. The amount finally allotted to the subscribers is Rs. 877 lakhs.

(*b*) The proceeds of the loan will be utilised for financing capital expenditure on irrigation works, for relending to the State Electricity Board, local bodies, agriculturists, etc., and for industrial development and such other plan schemes as are provided for in the Budget Estimates for 1959–60.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, may I know whether the Government will resort to the small savings drive even in the current year?

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, we have taken credit under the Small Savings Scheme, to the extent of Rs. 250 lakhs. But, there would not be any drive like that, but only voluntary subscriptions by doing propaganda for that purpose. The scheme would be organised only on that scale.

Mr. SPEAKER : Questions are over.